**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.401/2024**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of March 25th , 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திப்பணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி கணேசன் பக்கத்து வீட்டில் இருந்து வருகிறார். நானும், எதிரியும் பக்கத்து வீட்டில் குடியிருப்பதால் வீட்டிற்கு வெள்ளையடிப்பது குறித்து பிரச்சனைகள் இருந்தது. 13.05.2023 ம் தேதி, இரவு சுமார் 07.00 மணியளவில் வொர்க் ஷாப் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது எதிரி அவர் வீட்டு முன்பு நின்று கொண்டிருந்தார். குறுகலான பாதை என்பதினால் நான் மெதுவாக சென்றேன். எனது இருசக்கரவாகனத்தின் கேன்பார் பட்டு அவர் கீழே விழுந்து விட்டார். அது குறித்து காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார். என்னை போலீசார் விசாரித்து முடித்தார்கள். என்னை அந்த வீட்டில் இருக்க வேண்டாம், மலையராமபுரத்தில் உள்ள எனது வீட்டில் இருக்க சொன்னார்கள். அதன்படி நானும், எனது மனைவியும் அங்கு வசித்து

வருகிறோம். மலையராமபுரத்திற்கும், திப்பணம்பட்டிக்கும் சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் மளிகை சாமான் வாங்க திப்பணம்பட்டிக்கு தான் வருவேன். அவ்வாறு வரும் போது, எதிரி என்னை பார்த்து முறைத்து கொண்டிருப்பார். 21.05.2023ம் தேதி, காலை சுமார் 09.30 மணியளவில் வசந்தா மளிகை கடையில் சாமான்கள் வாங்கிவிட்டு, எனது இருசக்கரவாகனத்தில் டேங்க் முன்னால் கவரில் வைத்து கொண்டிருந்தேன். அப்போது, எதிரி TN-76-AS-4019 பிக்அப் வாகனத்தை எதிரே ஓட்டி வந்தார். என் மீதுள்ள கோபம் காரணமாக எதிரியை வண்டியை ஓட்டி வந்து என் மீது மோதினார். நான் கீழே குதித்து விட்டேன். எனது இருசக்கரவாகனத்தின் மீது ஏற்றி சேதப்டுத்திவிட்டார். நான் கீழே குதிக்காவிட்டால் நான் இறந்திருப்பேன். என்னை எதிரி "தேவடியா பயலே" என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, "உன்ன வண்டி ஏத்தி கொன்னா 1800 ரூபாய் தான் பைனு, இன்னைக்கு தப்பிச்சுட்டே, உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று சொன்னார். சம்பவம் சாட்சிகள் சுடலை, ராஜா அவர்களுக்கு தெரியும். எதிரி வண்டியை இடித்து நான் கீழே விழுந்ததில், வலது கால் மற்றும் முதுகில் வலி ஏற்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் சிகிச்சையில் இருந்த போது, போலீசார் என்னை வந்து விசாரிக்க, நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு இதுதான். அது **அ.சா.ஆ.1.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

திப்பணம்பட்டி கிராமத்தில் சுமார் 2000 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த கிராமத்தில் நாடார் சமுதாயத்தை சேர்ந்த மக்கள் அதிகமாக

இருக்கிறார்கள் என்றால் சரிதான். எதிரியின் பூர்விகம் அம்பாசமுத்திரம் அருகேயுள்ள வாகைகுளம் என்றால் அது எனக்கு தெரியாது. எதிரியின் தகப்பனார் திப்பணம்பட்டி கிராமத்தில் தலையாரியாக இருந்தார் என்றால் சரிதான். எதிரி முதலியார் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் அது எனக்கு தெரியாது. திப்பணம்பட்டி கிராமத்தில் நான் சார்ந்த ஆசாரி சமுதாயத்தை சேர்ந்த 50 - 60 வீடுகள் இருக்கும். நாங்கள் குடியிருந்ததாக கூறும் பூமி குற்றால பூமி என்றால் சரிதான். எதிரியும், அவரது சகோதரர் அருணாச்சலம் குடியிருப்பதும் குற்றால பூமி என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிக்கும் பட்டா பூமி இல்லை என்றால் சரிதான். சுவர் வெள்ளையடிப்பது சம்பந்தமான பிரச்சனை 3 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது. சுவர் வெள்ளையடிப்பது சம்பந்தமான பிரச்சனை சம்பந்தமாக நான் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. திப்பணம்பட்டி பஞ்சாயத்து தலைவராக ஐவராயன் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். இந்த வெள்ளையடித்தல் பிரச்சனை சம்பந்தமாக பஞ்சாயத்து தலைவர் ஐவராயரிடம் நான் புகார் கூறவில்லை. என்னுடைய தாய்மாமா முத்து ஆசாரி பாவூர்சத்திரத்திலுள்ள குருசாமிபுரத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அவர் சவுக்கு வியாபாரம் பார்த்தார் என்றால் சரிதான். அவர் திராவிட முன்னேற்ற கழக கட்சியில் அந்த பகுதியில் முக்கியமான நபர் என்றால் சரிதான். தாய்மாமா முத்து ஆசாரி வீட்டிலிருந்து 100 அடி தொலைவில் தான் நான் வேலை பார்க்கும் பஜாஜ் ஷோம் ரூம் உள்ளது என்றால் சரிதான். நான் பஜாஜ் ஷோம் ரூமில் மெக்கானிக்காக 10 ஆண்டுகள் வேலை பார்த்தேன். பஜாஜ் ஷோம் ரூமின் உரிமையாளர் வேலுச்சாமி நாடார் மகன் சுபாஷ் என்றால் சரிதான். நான் எதிரியின் சகோதரர் அருணாச்சலம் மற்றும் அவரது மனைவியை தாக்கியதாக

பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் என் மீது குற்ற எண்.162/2023, இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அது எ.சா.ஆ.1. அந்த வழக்கு தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த புகார் மனுவை நான் சிகிச்சையில் இருந்த போது ஒரு நபர் எழுதினார். அவர் யாரென்று தெரியாது. அவர் சிகிச்சைக்காக வந்தவர். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது கொடுத்த வாக்குமூலத்தை அங்கு வந்த பெண் போலீஸ் எழுதவில்லை என்றால் சரிதான். என்னுடைய பக்கத்து பெட்டில் சிகிச்சையில் இருந்த நபருடைய மகன் அந்த புகாரை எழுதினார். புகார் மனு எழுதிய பேப்பரை நான் வாங்கவில்லை. நான் சிகிச்சை முடித்து, ஒரு வாரம் கழித்து காவல் நிலையத்தில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் கூறிய விபரத்தை ஆய்வாளர் எழுதி கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. நான் கூறும் வாகனம் எங்கள் நிறுவனத்திற்கு பழுது பார்க்க வந்த வாகனம். எனக்கு சொந்தமாக இருசக்கரவாகனம் உள்ளது. அந்த வாகனத்தின் பதிவெண் TN-76-AM-9110 பேஷனோ. நான் ஆய்வாளரிடம் எனக்கு சொந்தமாக இருசக்கரவாகனம் இருப்பதாக கூறவில்லை என்றால் கூறவில்லை. நான் பயன்படுத்திய இருசக்கரவாகனத்தின் உரிமையாளர் யார், அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்ற விபரம் எனக்கு தெரியாது. எங்களுடைய ஷோ ரூமில் வேலைக்கு விடும் வாகனங்களின் உரிமையாளர் மற்றும் இதர விபரங்களை பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். நான் பயன்படுத்தியதாக கூறப்படும் வாகனம் பழுது பார்க்க கொண்டு வரப்பட்டதா? இல்லையா? என்ற விபரம்

எங்கள் ஷோ ரூம் உரிமையாளருக்கு தெரியும் என்றால் சரிதான். மலையனூரில் நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு தான். எனது உடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா மற்றும் ஒரு தங்கை. என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு எதிரி பார்க்கும் போதெல்லாம் என்னை முறைப்பார் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். எத்தனை முறை எதிரி எங்கெங்கு வைத்து முறைத்தார் என்று நான் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வசந்தா மளிகைக்கடை கிழக்கு பார்த்து உள்ளது. வசந்தா மளிகைக்கடையின் தென்புறம் பாண்டியன் உரக்கடைக்கு சொந்தமான காலி இடம் உள்ளது. மளிகைக்கு வடபுறம் சசிகுமார் ஹோட்டல் உள்ளது. வசந்தா மளிகைக்கடைக்கு முன்பு தென்வடல் தார் ரோடு என்றால் சரிதான். அந்த தார் ரோட்டின் அகலம் 12 அடி இருக்கும் என்றால் சரிதான். வசந்தா மளிகைக்கடையில் இருந்து என்னென்ன சாமான்கள் வாங்கினேன் என்று நான் ஆய்வாளர் விசாரணையில் கூறினேன். நான் வாங்கிய பொருட்களுக்கு பில் இல்லை. அந்த கடையில் பில் கொடுப்பது வழக்கமில்லை. எதிரி ஓட்டி வந்த பிக்அப் வாகனத்தின் உரிமையாளர் யாரென்று எனக்கு தெரியாது. உன்னை வண்டி ஏற்றி கொன்றால் 1800 ரூபாய் தான் அபராதம் என்று எதிரி சொன்ன விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறினேன். திப்பணம்பட்டியிலுள்ள சிவன் மெடிக்கலின் தென்புறம் கிழமேல் தார் ரோடு என்றால் சரிதான். சிவன் மெடிக்கல் மேற்கு பார்த்து உள்ளது. அதன் முன்புறம் தென்வடல் தார்ரோடு என்றால் சரிதான். சிவன் மெடிக்கலுக்கு தென்புறம் கிழக்கு போனால் ஆவுடையானூர் ரோடு, தெற்கு பார்த்தால் நாட்டார்பட்டி ரோடு என்றால் சரிதான். திப்பணம்பட்டியிலுள்ள எனது வீட்டிற்கு மேல்புறம் மல்லி வியாபாரி ராஜா

வீடு உள்ளது. அருணாச்சலத்தை நான் தாக்கியதாக வழக்கு தாக்கல் செய்த நேரம் எனக்கு 36 வயது இருக்கும். அப்போது அருணாச்சலத்திற்கு வயது 60 இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் அரை மணி நேரத்தில் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். நான் சம்பவம் நடந்தவுடன் நான் எனது தாய்மாமா முத்து ஆசாரிக்கு போன் செய்தேன். நான் முதல் விசாரணையில் கூறிய நாள், நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் சகோதர் மற்றும் சகோதரரின் மனைவியை தாக்கிய வழக்கில் சமாதானமாக செல்வதற்கு நான் கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அருணாச்சலம் மற்றும் அவரது மனைவியை தாக்கி காயப்படுத்தும் போது எனக்கு லேசான காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தாய்மாமா முத்து ஆசாரி செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர் என்பதை பயன்படுத்தி, அருணாச்சலத்திற்கு உதவியாக இருந்த அவரது சகோதரரை பழிவாங்கவேண்டும் என்பதற்காக நடக்காத சம்பவத்திற்கு, பழுதுபார்க்க வந்த வாகனத்தின் பாதிப்புகளை வைத்து மிகைப்படுத்தி இந்த எதிரி மீது உண்மைக்கு புறம்பாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரியின் தகப்பனார் திப்பணம்பட்டி கிராம தலையாரியாக பணியாற்றியபோது, எதிரியும் அவரது சகோதரரும் பிறந்ததினால், அவர்கள் சொந்த ஊருக்கு செல்லாமல் திப்பணம்பட்டி கிராமத்திலேயே குடியேறிவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு அங்கு வேறு ஆதரவும் இல்லை என்றால் சரியல்ல. திப்பணம்பட்டி கிராமத்தில் எதிரியின் சமூகத்தை சேர்ந்த வீடுகள் எதுவும் இல்லை என்பதை பயன்படுத்தி, எதிரியின் குடும்பத்தாரை தாக்கினால் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் அவரது சகோதரரை தாக்கி,

காயப்படுத்தி விட்டு, எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

PW1

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.03.26 16:43:40 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.401/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுடலை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of March 25th , 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் திப்பணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஒர்க் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 21.05.2023 ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் நானும், எனது மகனும் இருசக்கரவாகனத்தில் திப்பணம்பட்டியிலிருந்து மலையராமபுரத்திற்கு வந்து கொண்டிருந்தோம். பலசரக்குகடை முன்னால் அ.சா.1 சாமான்கள் வாங்கிவிட்டு வண்டியில் நின்றுகொண்டிருந்தார். எதிரி TN-76-AS-4019 பிக்அப் வாகனத்தை எதிரே ஓட்டி வந்தார். அ.சா.1ன் இருசக்கரவாகனத்தின் மீது வேண்டுமென்றே எதிரி மோதிவிட்டார். அதில் காயம்பட்ட அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

அ.சா.1 எனது சொந்த பெரியப்பா மகன். நான் இருசக்கரவாகனம் பழுதுநீக்கும் கடை பாவூர்சத்திரம் குருசாமிபுரத்தில் வைத்துள்ளேன். எனது கடையிலிருந்து 50 அடி தொலைவில் தான் என் தாய்மாமா முத்து ஆசாரி வீடு இருந்தது என்றால் சரிதான். திப்பணம்பட்டி ரத்னா ரைஸ் மில் பக்கத்தில் எனது வீடு உள்ளது. அ.சா.1 ஒரு வீட்டை விலைக்கு வாங்கினார். அந்த வீட்டை யாரிடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அந்த வீடு வாங்கி ஒரு ஆண்டு தான் இருக்கும். அ.சா.1ன் தாயார் திப்பணம்பட்டி மலையராமபுரத்தில் குடியிருந்து வந்தார். எனது பெரியம்மா குடியிருந்தது அ.சா.1 விலைக்கு வாங்கிய வீடு என்றால் சரிதான். மாரியப்பன் குடியிருந்தது அருணாச்சலம் வீடு பக்கம் என்றால் சரிதான். அருணாச்சலத்திற்கும், மாரியப்பனுக்கும் சுவர் வெள்ளையடிப்பது சம்பந்தமான பிரச்சனை எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாரியப்பன் அருணாச்சலத்தையும், அவரது மனைவியையும் தாக்கியது சம்பந்தமாக பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. வசந்தா மளிகை கடையிலிருந்து சிவன் மெடிக்கல் 300- 400 அடி இருக்கும். சிவன் மெடிக்கல் முன்பு ரோடு வளைவாக இருக்கும் என்றால் சரிதான். ஆவுடையானூரில் இருந்து வரும் வாகனங்களும், நாட்டார்பட்டியிலிருந்து வரும் வாகனங்களும் சந்திக்கும் இடம் சிவன் மெடிக்கல் முன்பு என்றால் சரிதான். வசந்தா மளிகை கடையிலிருந்து வி.பி.என் ரைஸ் மில் 400 லிருந்து 500 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக இருசக்கரவாகனம் உள்ளது. அ.சா.1ற்கு சொந்தமான இருசக்கரவாகனம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் எதுவும்

கூறவில்லை. 108 ஆம்புலன்ஸிற்கு யார் தகவல் கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கு நின்றிருந்தவர்கள் கூறியிருப்பார்கள். நான் மெயின்ரோட்டிற்கு வந்து கால் மணிநேரம் கழித்த பிறகு ஆம்புலன்ஸ வந்தது. நான் அ.சா.1 ஐ உடனடியாக பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்வதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மாரியப்பனுக்கு வெளிக்காயம் இல்லை என்றால் சரிதான். மாரியப்பனின் ஆடைகள் கிழியவில்லை என்றால் அவரது பேண்ட் கிழிந்திருந்தது. நான் வீட்டிற்கு வந்து ஆடை மாற்றி விட்டு, மாரியப்பனை மருத்துவமனைக்கு அனுப்பவில்லை. கிழிந்த உடைகளுடனேயே மாரியப்பனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். தென்காசி அரசு மருத்துவமனையில் அ.சா.1 ஐ சிகிச்சைக்கு சேர்க்கும்போது நான் உடனிருந்தேன். அ.சா.1 ஐ சிகிச்சைக்கு சேர்ந்தபிறகு உத்தேசமாக ஒரு மணி நேரத்தில் பாவூர்சத்திரம் போலீசார் வந்தார். அ.சா.1 போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை பக்கத்தில் இருந்த ஒரு நபர் எழுதினார். அதில் மாரியப்பன் கையெழுத்து செய்தார். பக்கத்தில் இருந்த நபர் தான் பேப்பரை வைத்து எழுதினார். போலீசார் என்னிடம் சம்பவத்தை பற்றி கேட்டார்கள். ஆனால் என்னிடம் வாக்குமூலம் எதுவும் எழுதி வாங்கவில்லை. அதன் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தபிறகு இன்றைய தேதி வரை போலீசார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன நாள், நேரத்தில் எந்தள சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது என்றும், அ.சா.1 எனது பெரியப்பா மகன் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.